# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001

தொலை பேசி : 044-45000032 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:118:2023 நாள்: 19.06.2023

அன்பார்ந்த தோழர்களே,

## <u>பாராட்டு விழா</u>

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் துவக்கப்பட்ட காலம் முதல் 1979ஆம் ஆண்டு முதல் யூனியன் வங்கியைச் சார்ந்த எந்த ஒரு தோழரும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகியாக தேர்வு செய்யப்படவில்லை. முதல் முறையாக, கடந்த மாதம் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மும்பை மாநாட்டில், அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தைச் சார்ந்த இரண்டு தோழர்கள் நிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர்.**N.சங்கர்** அவர்கள் துணைத் தலைவராகவும், நமது ஆந்திரப்பிரதேச மாநில பொதுச்செயலாளரான தோழர்.**V.உதயகுமார்** அவர்கள் இணைச் செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதனையொட்டி, அவர்களுக்கு ஒரு பாராட்டு விழாவினை நடத்த முடிவு செய்யப்பட்டு, விழா கீழ்க்கண்டபடி நடைபெறவுள்ளது.

**இடம் : A.K.நாயக் பவன், இரண்டாவது கடற்கரைச் சாலை, சென்னை - 600 001**

**(கடற்கரை ரயில் நிலையம் எதிரில் - GPO பின்புரம்)**

**நாள் : 24.06.2023 (சனிக்கிழமை)**

**நேரம் : காலை 10 மணி**

**உணவு : மதியம் 12.30 மணியளவில்**

இந்த விழாவில், நமது தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு, விழாவை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துகளுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**